பொன்னவும் - செல்வாவும்
(1947-ல் எடுத்த படம்)




# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 60

வள்ளுவர் ஆண்டு 2008 | மாசி 2 | ஸபர் 23 (13-2-77) ஞாயிறு | புத்தகம் 30 | இதழ் 85


## "தலைமைப் பண்பு நிறையப் பெற்றவர்"

### ஜீ.ஜீ. மறைவு குறித்து செல்வா இரங்கல்!

"திரு. ஜீ.. ஜீ. பொன்னம்பலம் அவர்களிடம் ஒரு தலைவனுக்கு இருக்கவேண்டிய குணதிசயங்கள் அனைத்தும் நிரம்பியிருந்தன. அவர் அக் குணதிசயங்களை சரியான படி பிரயோகித்து வந்தார். இளமைப்பருவத்திலேயே அரசியலில் அவர் பிரவேசித்தார். தமிழ் மக்களிடையே அக்காலத்தில் இருந்த ஏனைய தலைவர்களையெல்லாம்விட பொன்னம்பலம் அவர்களே உயர்ந்த நிலையை அடைந்தார்.

"சோல்பரி ஆணைக்குழுவின் முன்னர், பொன்னம் அவர்கள் உரை நிகழ்த்திய காலகட்டமே, அவரது தலைமைத்துவத்தின் உச்சக்கட்டமாக விளங்கியது. பொன்னம்பலம் அவர்கள் சிங்கள மக்களைப்பற்றித் தெரிவித்த அச்சம் நியாயமானதல்ல

—8-ம் பக்கம் பார்க்க



# அமரர் ஜீ. ஜீ.யின் பூதவுடல்

# சனிக்கிழமை மாலை தகனம்!

## தமிழ் ஈழம் முழுவதும் துயரம்!
## கடையடைப்பு, கறுப்புக் கொடிகள்!

## கண்ணீர்க் கடலில் கூட்டணித் தலைவர்கள்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரும், ஈழத்தின் புகழ்பூத்த சட்டமேதையுமான அமரர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களின் பூதவுடல் சனிக்கிழமை (12-2-77) மாலை யாழ்ப்பாண முற்றவெளி மைதானத்தில் இந்து சமய ஆசாரப்படி தகனம் செய்யப்படுகிறது. இதற்கு முன்னர் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக பூதவுடல் வைக்கப்பட்டிருப்பதுடன், இறுதிக் கிரியைகளும் அங்கு இடம்பெறும். அமரரின் பூதவுடல் தகனம் செய்யப்படும் நாள், தமிழ் ஈழம் முழுவதும் தேசிய துக்கதினமாக அனுட்டிக்கப்படுகிறது.

தனது 76வது வயது மலேசியாவிலுள்ள ஈபோ நகரிலுள்ள மருத்துவமனையில் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் 9-2-77 புதன் கிழமை அதிகாலை மாரடைப்பு காரணமாக காலமானர்.

பொன்னம்பலத்தின் மரணச்செய்தி பரவியநேரத்திலிருந்து கொழும்பிலும், தமிழ் ஈழமடங்கிலும் கறுப்புக்கொடிகள் உயர்த்தப்பட்டு தமிழ் மக்கள் துக்கம் அனுட்டித்தும், இரங்கல் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டும் வருகின்றனர், எங்கும்சோகவெள்ளமேகாணப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகத்தில் தமிழீழத்தின் சுதந்திரக் கொடியான உதயசூரியன் கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளது.

—8-ம் பக்கம்பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்




2-2-1976ம் நாள்.

அந்தநாள் புத்தளம் முஸ்லிம்களால் என்றுமே மறக்க முடியாத ஒருநாள்.

அந்த நாளில் நடந்த சோக நிகழ்ச்சியினை உலகின் கண்களுக்கு மறைக்க முயன்ற ஆட்சியாளர்களால் மறைக்கவும் முடியவில்லை. அந்த தியாக சம்பவத்தை தம் நெஞ்சங்களினின்றும் மறக்கமுயன்ற இஸ்லாமியப் பெருங்குடி மக்களால் மறக்கவும் முடியவில்லை:

புத்தளம் பெரியபள்ளி உள்ளேயும், வெளியேயும் ஏழு இளசுகளின் உயிர்களை காக்கி நாய்கள் துப்பாக்கி முனையால் பலிகொண்ட சம்பவம், புத்தளம் வரலாற்றில் அழிக்க முடியாததாக இணைந்து, கடந்த 2-2-77 உடன் ஒரு வருடம் பூர்த்தியாகிவிட்டது.

அதையொட்டி அண்மையில் 'சுதந்திரன்' நினைவுதின இதழ் வெளியிட்டிருந்தது.

'பொதுநலத் தொண்டரெ'ன்றும், 'தியாகச் செம்மலெ'ன்றும் தம்மைப் பீற்றிக் கொள்ளும் அரசாங்க, யூ. என். பி. பெருந்தலைகள் அன்றிலிருந்து இன்றுவரை வாய்மூடி மௌனிகளாக இருக்கும்போது எங்கோ தொலைவிலிருந்து எங்களின் பரிதாபநிலை கண்டு ஆதரவுக் கரங்கள் நீட்டும் தமிழரசின் மன்னர்களே!

அரசாங்கத்து பொம்மைகள் சில, பள்ளியில் நிகழ்ந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்திற்கு, "பலியானவர்களே காரணம்" என்று அறிக்கை விட்டபோது, எங்களூர் எம். பி. பெருந்தகையும், ஸ்ரீலங்கா தூண்களும் வளைக்குள் பதுங்கும் சுண்டெலிகளைப் போலிருந்த வேளையில், அரசாங்கத்துடன் காரசாரமான விவாதம் நடாத்தி, இத்துயர்மிகு சம்பவத்திற்கு நியாயமான முடிவு காணவேண்டுமென்று துடி, துடித்த ஈழத்தமிழகத்தின் ஏறுகளே!

உங்களின் கொள்கைகள், கோஷங்களுக்கு ஆதரவு வழங்கி, உங்களின் கரங்களைப் பலப்படுத்தி, உங்களின் தலைமையை ஏற்று, சிங்களக் கட்சியினருக்கு படுகுழி தோண்ட—

'தமிழ்ப் பேசுபவர்' என்னும் அடிப்படையில், பல நூற்றுக்கணக்கான புத்தளத்து இளைஞர்கள் தயாராகிவிட்டார்கள் என்னும் நல்ல சேதியை, முஸ்லிம் தியாகிகள் மறைந்த ஓராண்டு நினைவுதினத்தின் முதலாவது வாரத்தில் உங்களுக்கு அறியத் தருகிறேன்.

—புத்தளம், 'வான்மதி'

சுதந்திரன் ஆசிரியர்
அவர்களுக்கு

சென்ற ஆண்டு (2-2-76ல்) புனித புத்தளம் பெரிய பள்ளிவாசலில் பொலிசாரின் குண்டுகளுக்குப் பலியான நமது உடன் பிறவா சகோதரர்களின் மறைவை ஈழ நாட்டில் வாழும் சகோதர்களுக்கும் ஏனைய மக்களுக்கும்தெரியாமல் அந்த நிகழ்ச்சியின் உண்மையை மறைத்து—அதற்கு நேர்மாறான போலிக்காரணங்களைக் கூறிய ஆட்சியாளர்களுக்கும் அவர்களின் வாலைப் பிடித்துத்தொங்கிக்கொண்டிருக்கும் ஒரு சில முஸ்லிம் தலைவர்களுக்கும் சாட்டையடி கொடுப்பதைப் போல அன்று நடந்த பயங்கர வெறியாட்டத்தின் உண்மை நிலையையும் அதிலே இறந்த சகோர்தரர்களின் பூரண விபரங்களையும் நமது முஸ்லிம் மக்களுக்கு எடுத்து காட்டிய சுதந்திரனின் தன்னலமற்ற சேவையை முஸ்லிம் மக்கள் சார்பாக நான் பாராட்டுகின்றேன்.

அன்று நடந்த உண்மை நிகழ்ச்சியை ஆதாரபூர்வமாக காணும் ஒவ்வொரு முஸ்லிம் மக்களினதும் இரத்தம் கொதிக்கும் என்று திண்ணம்.

அதே நேரம் அன்று அவர்களுக்கு நடந்த வெறியாட்டம் நாளை எங்களுக்கும் நடக்கலாம். இந்த நிகழ்ச்சியின் அடிப்படை ஈழநாட்டில்வாழ்கின்ற சிறுபான்மை மக்களாகிய எங்களுக்கு ஒரு உண்மையை உணர்த்துகின்றது. அந்த உணர்வை இந்த அரசும் எங்களுக்கு நினைவூட்டுகின்றது. ஆம் இதுவரை காலமும் ஆளப்படும் இனமாக இருந்து நாம் நசுக்கப்பட்டு இருந்த நாம் இனி வரும் காலங்களில் எமது சமுதாயத்தை இனத்தை மொழியைக் காப்பாற்றி சுதந்திரமாகவாழ, மற்ற சிறுபான்மை மக்களோடு சேர்ந்து பாடு படவேண்டும் என்பதை உணர்த்துகின்றது.

சென்ற 2-2-76ல் வெறியர்களின் குண்டுகளுக்குப் பலியான சகோதரர்களுக்காகவும் இவ்வாறான உண்மைச் சம்பவங்களை எங்களுக்கு அறியத் தந்த சுதந்திரனின் எதிர்கால வெற்றிக்காகவும் இறைவனிடம் இரு கரமேந்தி இறைஞ்சுகின்றோம்.

—எம் எல். எம். சம்சுதீன்
அம்பாறை

●

கௌரவ ஆசிரியர்,
'சுதந்திரன்'

புத்தளம் நிகழ்ச்சிகளின் ஓராண்டு நினைவு இதழாக வெளிவந்த சுதந்திரனைப் படிக்கவே முடியவில்லை. படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம் மத சகோதரர்களின் படங்களைப் பார்க்கப் பார்க்க இதயம் வெடிப்பது போல இருந்தது. வெளியிடப்பட்டிருந்த ஐவரின் படங்களையும் பார்க்கையில் இவர்களையா 'கட்டுக்கடங்காதவர்கள்' என்று நம் பிரதமர் குறிப்பிட்டார் என வியப்பாயிருந்தது.

ஏழை, எளியவர்களின் இரத்தத்தை, அதுவும் ஆண்டவன் சந்நிதியில் சிந்த வைத்த கொடுஞ்செயலைப் பூசி மெழுகிவிட்டு, அதே மதத்தவர்களிடம் 'உரிமை முழக்கம்' செய்ய கூட்டுச் சேராக் கூடாரமமைத்து, குரல் எழுப்பியமை அவருக்கோ அவரது ஆட்சிக்கோ திறமைமிகு செயலாகப்படலாம். ஆனால் ஆண்டவன் அதனை எப்படி அளந்துவைத்திருப்பான் என்பதைக் காலம் காட்டாமல் போகவே போகாது. ஒன்றுமட்டும் நிச்சயம். மேற்படி சம்பவத்தை தெரிந்தோ தெரியாமலோ கண்மூடிக்கிடந்த முஸ்லிம் சமுதாயத்தைச் சிந்திக்க வைத்திருக்கிறது.

அரபு மண்ணில் பாலஸ்தீனர்களின் செந்நீர் சிந்துவது நீதிக்காக வென்றால், அதே நீதிக்காக விதைககப் பட்டுள்ள விதைதான் 'கட்டுக்கடங்காதவர்கள்' என நம் மாண்புமிகு பிரதமரால் வர்ணிக்கப்பட்ட இந்த நல்ல உயிர்களின் 'சிந்திய செந்நீரும் என்பதை முஸ்லிம் சகோதரர்கள் உணர்ந்தாலன்றி எதிர்காலத்துக்கு விடிவிருக்காது.

பதவிக்காகப் பரிந்து பேசும் போலிகளை — அவர்கள் எந்த மதத்தவராக, இனத்தவராக இருந்தாலும் —தூக்கி எறிந்துவிடும் காலம் நமக்கு வரவேண்டும்.

தாஇரத்து ஷுப்பானில் முஸ்லிமின் அரசியல் விவகாரக்குழு அறிக்கை முஸ்லிம் சகோதரர்க்கு மட்டுமல்ல தமிழ்மக்கள் அனைவர்க்குமே உண்மையை உணரவைக்கிறது.

சிலரைப் பலநாள் ஏய்க்கலாம்; பலரைச் சிலநாள் ஏய்க்கலாம்—ஆனால் எல்லாரையும் எந்நாளும் ஏய்க்க முடியாது.

—அமலேந்திரன்
கொழும்பு-12.




செ; இராசநாயகம்,
கொழும்பு-6.

கே: தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் அடுத்த பொதுத்தேர்தலுக்கு ஆட்களை நிறுத்துவதில் குத்து வெட்டு நடப்பதாக ஒரு பத்திரிகை ஆனந்தப்பட்டிருக்கிறதே!

ப: அப்படியொரு குத்து வெட்டு ஏற்பட்டு கூட்டணி சிதறவேண்டுமென்பது தான் அந்தப் பத்திரிகையினதும், அதை நடத்துபவர்களினதும் ஒரே ஆசையாகும், தமிழின ஒற்றுமையை சிண்டு முடிந்து சிதறடிப்பதில்தான் அவர்களுக்கு எத்தனை ஆசை! ஏழுஆண்டுகளாக தமிழினத்தை திரும்பிப் பாராமல் குறட்டை விட்டுத்தூங்கிக்கிடந்தவர்கள் தேர்தல் வரப்போகிறதென்று தெரிந்ததும் தமிழினத்துக்காக உருகத் தொடங்கியிருக்கிறார்கள். அவர்கள் நினைப்பதுபோல கூட்டணி சிதறப் போவதுமில்லை — தமிழின ஒற்றுமை சிதையப்போவதுமில்லை! அடுத்த வீட்டை எட்டிப்பார்க்கும் கேடு கெட்ட பழக்கத்தைவிட்டு விட்டு, தங்களுக்கென்று சொந்தமாக ஏதாவது திட்டம் இருந்தால் அவர்கள் அதைச் சொல்லட்டும்!

கே: தேசிய அரசாங்க காலத்தில் தமிழரசுக்கட்சியின் திருகோணமலைப் பிரதிநிதியாக இருந்தவர், பெப்ரவரி 4 சுதந்திரதினக் கூட்டத்தில் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் பங்குபற்றியதாக பத்து ஆண்டுகள் கழித்து இப்போது கூறுகிறதே ஒரு பத்திரிகை!

ப: பத்து ஆண்டுகளுக்கு முன் அந்தப் பத்திரிகை கூறுவதுபோல திருகோணமலை தமிழரசுப் பிரதிநிதி சுதந்திரதின வைபவத்தில் பங்குபற்றினாரா இல்லையா என்பது எனக்கு சரியான நினைவில் இல்லை; ஆனால் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் அந்தப் பத்திரிகை சார்ந்துள்ள கட்சியின் தலைவர் தமிழரசுக் கட்சியிலேயே உறுப்பினராக இருந்தார் என்பது எனக்குத் தெரியும்!

ஃ

பாலசிங்கம்
மட்டக்களப்பு

கே: தமிழ் இளைஞர்களின் விடுதலைக்குத்தானே தான் காரணம் என்று கூறியிருக்கிறாரே ராஜன் செல்வநாயகம்?

ப: தன்னைக்கொலைசெய்ய முயன்றதாக இவர் சுமத்திய ஆதாரமற்ற குற்றச் சாட்டின் மீதுதான் இப்போது விடுதலையான அப்பாவி தமிழ் இளைஞர்கள் ஆண்டுக்கணக்காக இதுவரைவெலிக்கடை வெஞ்சிறையில் வாடினார்கள். இந்த இளைஞர்கள் விடுதலையாவதை தடுக்க முயன்று இவர் மூக்கறுபட்டிருக்கலாம்; விழுந்தும் மீசையில் மண்படவில்லையென்று இப்போது புதிய ராகம்பாடுகிறார்! அரசியல் பைத்தியங்கள் இப்படித்தான் உளறிக் கொண்டிருக்கும். விட்டுத் தள்ளுங்கள்!

ஃ

ஏ. தோமாஸ்
முந்தல்

கே: ஒரு சிலர் காதல் கைகூடாதபோது கழுத்தில் கயிறிட்டு தற்கொலைசெய்து கொள்ளுகிறார்களே! அது ஏன்?

ப: தன்னம்பிக்கையில்லாததுதான்!

ஃ

நா. தேவஜெகன்,
செட்டித்தெரு
நல்லூர்

கே: ஐ. தே. கட்சி ஆட்சிக்கு வந்தால் தமிழன் நிலை எவ்வாறு இருக்கும்?

ப: பனையிலிருந்து விழுந்தவனை யானையேறி மிதித்தது போல இருக்கும்!

கே: தமிழ் இளைஞர்கள் யாவரும் அரசைத் தட்டிக் கேட்கப்புறப்பட்டால்...?

ப: தமிழினத்தின் பகைவர்கள் தூள் தூளாவர்! தமிழ் அன்னையின் முகத்தில் ஆனந்தம் பொங்கும்!

ஃ

பி. பாலகிருஷ்ணன்
மெயின் வீதி
மத்துகமை,

கேள்வி: இவ்வாண்டு பொதுத்தேர்தல் வந்தால் அதில் காசி ஆனந்தனின் பங்கென்ன?

ப: கூட்டணி எதைச் செய்ய கட்டளையிடுகிறதோ அதைச்செய்வார்!

ஃ

க. அன்பழகன்
மட்டுநகர்

கே: ஆனந்தசங்கரியின் கேள்விகளுக்கு குமாரசூரியர் என்ன பதிலை அளிப்பார்?

ப: ஆனந்தசங்கிரியின் கேள்விகள் குமாரசூரியரை வாயே திறக்கமுடியாதபடி செய்துவிட்டபோது அவர் வாய்திறந்து எப்படி பதிலளிக்கமுடியும்?

ஃ

சு சபாரத்தினம்
மாமடு

கே: தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாடு கோரிக்கையை கைவிடும் காலமும் வரும் என்கிறாரே குமாரசூரியர் உண்மையா?

ப: ஆம், உண்மைதான்; தனிநாடு கிடைத்தபின்னர், அக்கோரிக்கைக்கு அவசியமில்லையே!

ஃ

வீ. ஆர். நாதன்
"வெருகலம்பதி"
திடலூர்

கே: தமிழ்ஈழம் கிடைத்தால் தென்பகுதியில் வாழும் தமிழ் அரசாங்க ஊழியர்களின் நிலை என்ன?

ப: அவர்கள் தமிழ்ஈழ அரசாங்கத்தின் ஊழியர்களாக மாறுவார்கள்!

ஃ

சி, சுரேந்திரன்,
வரணி!

கே: கூட்டணி தலைவர்களில் ஒருவரானதிரு, தொண்டமானது கட்சியான இ. தொ. கா. தான் தனி நாடு கொள்கையை முற்றாக ஏற்க முடியாதென்று கூறிவிட்டதே. கூட்டணியின் முக்கிய கொள்கையான 'தனிநாடு' கொள்கையை ஏற்கமுடியாதென்று கூறிய பின்பும் திரு. தொண்டமானை ஏன் கூட்டணியில் சேர்த்துவைத்திருக்கிறீர்கள்?

ப: திரு. தொண்டமான் அவர்கள் மலையகத் தமிழர்களின் இன்றைய நிலையில் அவர்களுக்கு தனிநாடு ஏற்புடைத்தல்ல என்று கூறுகிறாரே தவிர வடக்கு கிழக்கில் தனிநாடு அமைவதற்கு தாம் மாறுபட்டவரல்லர் என்று கூறியிருக்கிறாரே!

கே: நல்லூர் பா. உ. அ[illegible]ளம்பலம் அவர்கள் வ[illegible]ய பொதுத்தேர்தலில் சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடப் போகிறாராம் அவர் பற்றி தங்கள் கருத்து?

ப: 'கை'யறு நிலைதான்!

● கேள்விகள் அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பவேண்டும்.

திருவாளர் குயுக்தியார்
194 ஏ பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இந்தக் காட்சியை இனி என்று காண்போம்?

மூதறிஞர் தந்தை செல்வா நடுநாயகமாக விளங்க இரு புறமும் ஜீ. ஜீ. பொன்னம்பலமும் அமரர் திருச்செல்வமும் மகிழ்ச்சிபொங்கக் காணப்படுகின்றனர். ட்ரயல் — அற் — பார் விசாரணையின் போது எடுத்த படம் இது. இன்று திருச்செல்வமும் இல்லை; பொன்னம்பலமும் இல்லை; தந்தையை தனியாக விட்டுவிட்டு இருவரும் பிரிந்துவிட்டனர். இது போன்ற மகிழ்ச்சியான காட்சியை இனியொரு முறை நாம் காணவே முடியாது.

# போதுமய்யா சோதனை!

**அன்பு நண்பா,**

பேனாவை எடுக்கிறேன்—எதையும் எழுத முடியாதபடி கரங்கள் நடுங்குகின்றன; கண்கள் குளமாகி கடதாசியை ஈரமாக்குகின்றன; இதயமோ 'ஓ' வெனக் கதறுகிறது; சோதனை மேற்சோதனை போதுமடாசாமி — வேதனை தான் தமிழனுக்கு என்றால் தாங்காது நீதியென்று உள்ளம் இறைவனை நோக்கிக் குமுறுகிறது; துயரம்... துயரம்...ஒரே துயரவெள்ளம்! பேரிடிக்குமேல் பேரிடி! வேதனைக்குமேல் வேதனை!

ஆம் — ஈழத்தமிழகத்தின் மூத்த தலைவர்களில் ஒருவராக விளங்கிய ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் மலேசியாவில் வைத்து மாரடைப்பினால் திடீரென காலமானார் என்றபேரிடிச் செய்திகேட்டு மாரடித்து அழுகின்றனர் தமிழ்பேசும் மக்கள்! பெப்ரவரி 9ம் நாள் அதிகாலை கிடைத்த இந்தச்செய்தியைக் கேட்ட நேரம் முதல் இதயமே நின்று விட்டதுபோல வேதனைக் கடலுள் மூழ்கி விம்மிவிம்மி அழுகின்றன தமிழ் உள்ளங்கள்!

**இரண்டு திங்களுக்கு முன்னர்தான் தமிழ்ச் செல்வமாக விளங்கிய அருமைத் 'திரு'வை பறிகொடுத்தோம்; அந்த வேதனையிலிருந்து விடுபடமுன்னர், பொன்னம்பலம் எனும் தமிழர்பலத்தை வெட்டி வீழ்த்திவிட்டு, நாம் விம்மியழுவதைப் பார்த்து வேடிக்கை பார்க்கிறான் காலன் எனும் கொடியோன்!**

ஏறத்தாழ ஐம்பது ஆண்டு காலமாக ஈழத்தமிழகத்து அரசியலில் தனக்கெனவோர் தனியிடத்தைப் பிடித்து—'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்று ஆவேச முழக்கமெழுப்பி—தமிழினத்தின் நல்வாழ்வுக்காக தனக்குச் சரியென்றுபட்ட வழியில் பணியாற்றி வந்த ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் இன்று மீளாத்துயிலில் ஆழ்ந்துவிட்டார்! தமிழர் விடுதலைக்கூட்டணியுடன் இணைந்து, அதன் தலைவர்களில், ஒருவராக விளங்கி ட்ரயல்-அற்-பார் நீதிமன்றத்தில் தமிழ்ஈழவிடுதலை முழக்கமெழுப்பி தமிழின ஒற்றுமையை உறுதிப்படுத்தி எம்நெஞ்சமெலாம் குளிரவைத்த ஜீ. ஜீ. அவர்கள் திரும்பிவராத இடம்நோக்கிப் பெரும் பயணம் போய்விட்டார்!

**சிங்கம் போன்ற வீரநடை! சிங்கம் போன்ற கர்ஜனை! ஆங்கிலேயன் கூடத் தோற்றுப்போகும் விதத்தில் ஆங்கிலத்தில் தனிப்புலமை! கருநிற மேனியிலும் ஒருவித பளபளப்பு;எதிரிகளும் அஞ்சிநடுங்கும் ஆண்மைமிகு பார்வை! சட்டத்துறையிலோ உலகப் பெரும் மேதை! ஆழமான தெய்வ பக்தி; இத்தனையும் கொண்டு ஈழத்தமிழர் தம் இதயம் கவர்ந்திருந்த சொல்வேந்தர் பொன்னம்பலம் இனி நம்மிடையே இல்லை!**

சோல்பரி ஆணைக்குழு முன்னர் தோன்றி —ஈழத்தமிழினத்தின் சார்பாக ஐம்பதுக்கு ஐம்பது—அதாவது சமபல பிரதிநிதித்துவம்—கோரி பத்தொன்பது மணித்தியாலங்கள் தொடர்ந்து விடாப்பிடியாக வாதாடிய சொல்லேருழவனை நாம் இன்று பறிகொடுத்துவிட்டுத் தவிக்கிறோம்!

1944ம் ஆண்டு தமிழ் காங்கிரஸ்கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பொன்னம்பலம் எழுப்பிய அந்த இலட்சிய முழக்கம் இன்றும் எம் செவிகளில் எதிரொலித்துக் கொண்டேயிருக்கிறது!

## அரசியல் மடல்

"We Tamils and other minorities, by and large have come to the conclusion, that we cannot and will not accept sinhala majority rule. I say this as a member of the Tamil community which proposes to live in this country with self respect and dignity."

**"தமிழ் மக்களாகிய நாங்களும், ஏனைய சிறுபான்மை மக்களும், பெரும்பான்மை சிங்களவர் ஆட்சியை ஏற்றுக்கொள்ளவுமில்லை; ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப்போவதுமில்லை! இது எங்கள் முடிந்த முடிபு. தன்மானத்தோடும் கௌரவத்தோடும் இந்த நாட்டில் வாழ்வதென்று திடசங்கற்பம் செய்துள்ள தமிழினத்தின் ஓர் உறுப்பினர் என்ற முறையில் இதை நான் கூறுகிறேன்!"**

1944ம் ஆண்டு நவம்பர் மாதம் 27ம் திகதி கொழும்பு நகரமண்டபத்தில் நடைபெற்ற தமிழ் காங்கிரசின் முதலாவது தேசிய மாநாட்டில் திரு. பொன்னம்பலம் நிகழ்த்திய இந்த இலட்சிய முழக்கம் — முப்பத்திமூன்று ஆண்டுகளுக்கு முன்வைத்தகூற்று —இன்றைக்கும் தமிழினத்தின் செவிகளில் எதிரொலித்தபடிதான் இருக்கிறது — ஆனால் பொன்னம்பலம் ஐயாதான் போய்விட்டார்!

"தமிழர்கள் ஒற்றையாட்சி சோல்பரி அரசியலமைப்பை ஏற்க ஒருபோதும் தயாராக இல்லை; அவர்கள் சுயநிர்ணய உரிமையையே கோரிநிற்கிறார்கள்!" என்று 1947ம் ஆண்டு பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு அமைச்சருக்கு திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அனுப்பிய தந்தியிலிடம்பெற்ற அந்த உணர்ச்சிமிகு வரிகளின் வழியே ஈழத்தமிழினம் இன்று அணிதிரண்டு போர்க்களத்தில் குதித்திருக்கிறது; ஆனால் அந்தோ, பொன்னம்பலம் ஐயா நம்மைவிட்டுப் போய்விட்டார்!

தமிழினத்தின் உரிமைகளுக்காக அவர் ஆற்றிய வீர உரைகள் — நீதிமன்றங்களில் அவர் நிகழ்த்திய சட்டவாதங்கள் — பாராளுமன்றத்தில் அவர் பாடி வைத்துச்சென்றுள்ள பரணிகள் — அனைத்தும் நம் நெஞ்சத்திலே நிழலாடுகின்றன!

1972ம் ஆண்டு தமிழினம் ஒற்றுமைப்பட்டு—திருகோணமலையிலே தமிழர் கூட்டணி அமைந்தபொழுது, அதற்கு முழு ஆசியும் ஆதரவும் வழங்கி, தமது கட்சியினரை கூட்டணியுடன் சேர்ந்து உழைக்கும்படியும், எந்தக்கட்டத்திலும் ஏற்பட்டுள்ள இனஒற்றுமைக்கு குந்தகம் ஏற்படாதபடி நடந்துகொள்ளும்படியும் அறிவுறு

—தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## தாரகை வீழ்ந்தது!

ஈழத்தமிழகத்து அரசியல்வானில் கடந்த அரை நூற்றுண்டாக விட்டுவிட்டு ஒளிவீசிக்கொண்டிருந்த ஒரு தாரகை வீழ்ந்துவிட்டது! இலங்கையின் சட்டத் துறையில் அறிவொளி பரப்பி புகழ் ஏணியின் உச்சியில் ஜொலித்துக்கொண்டிருந்த எழுஞாயிறு மறைந்துவிட்டது! "தமிழன் என்று சொல்லடா; தலைநிமிர்ந்து நில்லடா" என்று முழங்கி, தமிழ்பேசும் மக்களை முதன் முதலில் தட்டியெழுப்பிய மாபெரும் சொல்லேருழவரின் வாய் மூடிக்கொண்டுவிட்டது! தனது தள்ளாத நிலையிலும்—தமிழின ஒற்றுமையைக் கட்டிக்காத்திடும் ஒரே நோக்குடன் தளபதி அமிர்தலிங்கத்துக்காக ட்ரயல்—அற்—பார் நீதிமன்றத்தில் ஆஜராகி பல நாட்களாக வாதாடி வெற்றிகுவித்த வேழம் வீழ்ந்துவிட்டது.

ஆம், திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களின் திடீர் மறைவு — ஈழத்தமிழினத்துக்கு விழுந்த மற்றோர் பேரிடியாகும்! இரண்டு மாதங்களுக்குள் தமிழ் சமுதாயத்தின் அறிவும் ஆற்றலும் அனுபவமும்மிக்க இரண்டு மூத்த தலைவர்களை காலன் நம்மிடமிருந்து அடுத்தடுத்து ஈவிரக்கமின்றிக் கவர்ந்து கொண்டுவிட்டான்!

ஈழத்தமிழகத்தின் கடந்த ஐம்பது ஆண்டுகால அரசியல் வரலாற்றில் தனக்கெனவோர் நிலையான இடத்தை பெற்றுக்கொண்டுள்ள திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள், தனக்குச் சரியென்று தோன்றிய பாதையில் தமிழ் சமுதாயத்துக்கு ஆற்றிவந்த பணிகள் தமிழ்ச் சமுதாயத்தின் சரித்திர ஏட்டில் என்றும் நிலைத்திருக்கும்!

திரு. பொன்னம்பலம் அவர்கள் பின்பற்றிய அரசியற் பாதையும் சுதந்திரன் பின்பற்றிய அரசியற்பாதையும் இடையிலே சில ஆண்டுகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருந்தபோதிலும்— திரு. பொன்னம்பலமும் சுதந்திரனும் ஒருவருக்கொருவர் முட்டிமோதிக்கொண்டபோதிலும்— அவரது ஆரம்பகால அரசியற் பணிகளுக்கும் இறுதியில் அண்மைக்காலத்தில் தமிழினம் ஒற்றுமைப்பட்டு, ஒரே இலட்சியத்தின் அடிப்படையில் கூட்டணி அமைத்த பின்னர் குறுகிய காலத்துள் அவர் ஆற்றிய மிகச் சிறந்த பணிக்கும் நாம் என்றும் தலைசாய்த்து மரியாதை தெரிவித்து வந்திருக்கிறோம்!

சிங்கள ஆட்சியை ஒருபோதுமே தமிழர்கள் ஏற்கமாட்டார்கள் என்று 1944ம் ஆண்டே சங்க நாதம் முழக்கி—தமிழர்களைத் தாழ்த்திய சோல்பரி ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு எதிராக சோல்பரி ஆணைக்குழுவின் முன்னர் பத்தொன்பது மணித்தியாலங்கள் தொடர்ந்து விடாப்பிடியாக வாதாடி — தமிழர்கள் சோல்பரித்திட்டத்தை நிராகரித்துவிட்டார்கள்; அவர்கள் சுயநிர்ணய உரிமையையே கோரி நிற்கிறார்கள் என்று பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு அமைச்சருக்கு கனல் பறக்கும் தந்தியனுப்பி – தமிழின உரிமைக்காக மூர்த்தண்யமாக வாதாடி நின்ற அந்தப் பழைய ஜீ.ஜீயை—மீண்டும் அண்மையில் நடைபெற்ற ட்ரயல்—அற்—பார் வழக்கின்போது கண்டோம்; களிப்பு மிகக் கொண்டோம்! ஒரே இலட்சியத்தின் அடிப்படையில் மீண்டும் அவரும் நாமும் இணைந்துவிட்டது கண்டு அளப்பிலா மகிழ்ச்சிக்கடலில் திளைத்தோம்; ஆனல் காலன் எனும்கொடிய பாவி அதற்குள் அவரை எடுத்துக் கொண்டுவிட்டான்!

அமிர்தலிங்கம் அவர்களுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு, தனிப்பட்ட அமிர்தலிங்கம் அவர்களுக்கு எதிரான வழக்கு அன்று; தமிழினத்துக்கு எதிரான வழக்கு என்பதை உணர்ந்து, உடல் நலம் குன்றிய நிலையிலும்—இளைக்க இளைக்க — திரு. ஜீ. ஜீ. அவர்கள் பல நாட்களாக தொடர்ந்து வாதாடி, தமிழின ஒற்றுமையைக் குலைக்க முயன்றோரின் எண்ணத்தில் மண்ணைப் போட்டு தமிழினத்தின் இறுக்கமான ஒற்றுமையையும், உறுதிப்பாட்டையும் எடுத்துக்காட்டி நின்ற அந்த இனிய காட்சியை தமிழினம் எப்படி மறக்கமுடியும்?

தமிழினத்தின் ஐக்கியக்கோட்டையான தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும், அதன் தனிநாடு இலட்சியத்துக்கும் திரு. பொன்னம்பலம் உடன்பாடானவரல்லர் என்று தமிழின எதிரிகள் பரப்பி வந்த பொய்ப்பிரசாரத்தை முறியடிக்கும் வகையிலும் இன ஒற்றுமையை மேலும் இறுக்கமாக கட்டியெழுப்பும் முறையிலும் ஜீ. ஜீ. அவர்கள் ட்ரயல்—அற் — பார் வழக்கின் போது செயற்பட்டதை யாரே மறக்கமுடியும்?

உலகில் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு பணிக்காகவே இறைவன் அனுப்புகிறான்; அந்தப்பணி முடிந்ததும் அவனைத் திருப்பி அழைத்துக்கொள்கிறான்! அந்த முறையில் ஜீ. ஜீ. யின் பணி முடிவடைந்துவிட்டது. இறைவன் அவரை அழைத்துக்கொண்டுவிட்டான்! நமது பணி, அவர்விட்ட இடத்திலிருந்து அவரது பணியைத் தொடர்வதுதான்!

ஆம், ட்ரயல்—அற்—பார் நீதிமன்றத்தில் திரு. பொன்னம்பலம் அவர்கள் இறுதியாக கூறிய வாக்கியம் ''சுதந்திரத் தமிழ்ஈழம் அமையும் காலம் வெகுதூரத்தில் இல்லை'' என்பதுதான்! சுதந்திரத் தமிழ்ஈழமே அவருடைய உள்ளத்தில் நிறைந்திருந்த இறுதி இலட்சியமாக—இறுதி ஆசையாக—விளங்கியிருககிறது!

எனவே இந்த இலட்சியத்துக்காக — சுதந்திரத் தமிழ் ஈழத்துக்காக — தமிழர் விடுதலைக் கூட்டணியின்கீழ் தமிழ் தேசிய இனம் மேலும் இறுக்கமாக ஒன்றுபட்டு உழைப்பதே ஜீ ஜீ. அவர்களின் ஆத்ம சாந்திக்கு நாம் செய்யக்கூடிய ஒரேயொரு கைம்மாருகும்!

ஆம்—அந்தக்கடமையில் நம் மனதைச் செலுத்தி தமிழர் விடுதலைக் கூட்டணி மூலம் ஏற்பட்டிருக்கும் இன ஒற்றுமையை மேலும் வலிவுடனும் பொலிவுடனும் [illegible] — வளர்த்து — தமிழ்ஈழத்தை மீள அமைக்கும் புனிதப்பணியில் ஈடுபட்ட பொன்னம்பலம அவர்களின் [illegible] ஆணையிட்டு உறுதியெடுப்போமாக!

# ஜீ. ஜீ. யின் அரசியல் வாழ்வில் மறக்கமுடியா நினைவுகள்!

சட்டமாமலையொன்று சரிந்துவிட்டது. தமிழரின் சக்தியொன்று பிரிந்துவிட்டது. சிங்கள சிறிலங்காவில் சட்டத்துறையையே அதிர வைத்துக்கொண்டிருந்த பெருங்குரல் ஓய்ந்துவிட்டது.

ஆம் தமிழனில் நுண்ணிய அறிவுக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்துவிட்டார். தமிழ்சமூகத்திற்கும் ஈழத்திற்கும் தொண்டாற்றிய பெரியார்களில் ஒருவர். இவரது அறிவுத்திறன் சட்டமேதையாக தொழில் புரிந்த காலத்தில் மட்டுமல்ல பாடசாலையில் மாணவனாக விளங்கிய காலத்திலேயே ஆசிரியர்கள் புகழ்ந்து போற்றும் அளவிற்கு திறமையுடன் விளங்கியது.

1902ம் ஆண்டு நவம்பர் 8ம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள அல்வாயில் பிறந்த ஜீ. ஜீ. ஆரம்பத்தில் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியிலும்-பின்னர் கொழும்பு புனிதயோசப்கல்லூரியிலும் கல்விபயின்றார். யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் மாணவனாக இருந்த காலத்தில் அதன் அதிபராக விளங்கிய வண. பிதா. மத்தியூஸ் அடிகளாரின் அபிமானத்துக்கும் அன்புக்குமுரிய மாணவனாகத் திகழ்ந்தார்.

தனது மாணவனாகிய திரு. பொன்னம்பலத்தைப் பற்றி மற்றவர்களுடன் கதைக்கும் வேளையில் ''பொன்னம்பலம் பிற்காலத்தில் மிகப் பிரபல்யமாக விளங்குவார்'' என்று வண. மத்தியூஸ் அடிகள் அவர்களால் புகழப்பட்டிக்கின்றார். அதன் காரணம் அந்நாட்களில் திரு. பொன்னம்பலம் அவர்களிடம் எதையும் உடனடியாக விளங்கிகொள்ளும் சத்தியும் — கல்வியில் காட்டிய பிரயாசையுமேயாகும்.

பின்னர் கொழும்பு புனித யோசப்கல்லூரியில் பயின்றபோது அக்கல்லூரியின் அதிபர் வண. லெகொக் அடிகளாரின்பாராட்டுதலுக்கும்பற்றுதலுக்கும் உரியவராகத் திகழ்ந்தார். ஆங்கிலத்திலும் தாவரவியலிலும் தனித்துவம் பெற்றுவிளங்கினார். யோசப் கல்லூரியின் விவாத அரங்குகளுககு செயலாளராக விளங்கிய அவருடைய பேச்சுத்திறமையின் பொருட்டு கவர்னர் மனிங்கிடம் அதற்கான விருதையும் பெற்றார்.

அந்நாளில் சிறந்த சட்ட மேதையும் அகில இந்திய தேசிய காங்கிரசின் தலைவருமான திரு. சிறீனிவாச ஐயங்கர் இலங்கைக்கு வருகை தந்திருந்தபோது அவரைத் தமது சொந்த முயற்சியின் பயனாக கல்லூரியில் சொற்பொழிவாற்றுவதற்கு ஏற்பாடு செய்தார். பொன்னம்பலம் செய்த இந்த ஏற்பாட்டினை வெள்ளையரான அதிபர் வண. லெகொக் அடிகள் விரும்பாவிட டாலும் ஏற்பாடு செய்தவர் தன் அன்புக்குரிய மாணவர் என்பதால் அதற்கு அனுமதியளித்தார். அன்று கல்லூரியில் சொற்பொழிவாற்றிய திரு. சிறீவாச ஐயங்கர் அவர்கள் "மிக விரைவில் இலங்கையையும் இந்தியாவையும் விட்டு வெள்ளையர்கள்வெளியேறவேண்டும்'' என்றுபேசியதற்கு வண. லெகொக் அடிகள் "வெள்ளையர்கள் வெளியேறினல் இந்தியரும், இலங்கையரும் தமது நாடுகளை நிாவகித்துக் கொள்ள மாட்டார்கள்'' என்றார்.

இவர்கள் இருவரும் மிக வர் கண்ணியமான ம[illegible]ற



யில் மோதிக்கொண்டாலும் திரு. பொன்னம்பலம் அவர்கள் நன்றியுரை பகரும் வேளையில் ''வெள்ளையர்களால்—நாம் அறிவு பெறுகின்றோம். முன்னேறுகிறோம் அவர்களுக்கு நாம் நன்றியுடையவாகளாக இருக்கும் அதே வேளையில் நம்மை ஆளுவோம்'' என்று சாதுரியமாகப்பதிலளித்ததன் மூலம் திரு. சிறீனிவாச ஐயங்கரின் பாராட்டுதலைப்பெற்றார்.

பின்னர் இயற்கை விஞ்ஞான மேற்படிப்புக்காக அரசாங்கத்தின் உதவிச் சம்பளத்தில் இங்கிலாந்து பயணமானார். அங்கு அவர் பயின்று ஒரு சாதாரண சிவில் ஊழியனாக வருவதையே அவரது பெற்றோரும் உறவினரும் விரும்பிய போதிலும் அவர் லண்டன் கேம்பிறிஜ் பாடசாலையில் சட்டம் பயின்று பாரிஸ்டராக வெளியேனார்.

அங்கிருந்து வந்துகொழும்பில் தொழிலை ஆரம்பித்த அவருக்கும் — சட்டத்துறையில் கடமையாற்றிக்கொண்டிருந்த திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுக்கு மிடையில் நட்புஏற்பட்டது.

முதன் முதலில் மன்னாரில் சட்ட சபைத்தேர்தலுக்குப் போட்டியிட்ட அவர் தோல்வியைத்தழுவினலும் அரசியலில் அயராது பாடுபடடார்.

டொனமூர் அரசியல் சட்டம் ஏற்படுத்தப்பட்ட காலத்தில், டொனமூர் சட்டம் தமிழ் மககளுக்கு போதிய பாதுகாப்புத் தரவில்லை என்று வாதாடிய ஜீ. ஜீ. வெள்ளத்வத்தை பிளாசா படமாளிகையில் அந்நாள் சட்டசபையின் (Legislative Council) யாழ்ப்பாண உறுப்பினராகவும் ''Ceylon Partriot'' பத்திரிகையின் ஆசிரியராகவும் விளங்கிய திரு. ஏ. கனகரெட்ணம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் டொனமூர் சட்டத்தை எதிர்த்து தன் கருத்தை வலியுறுத்திப் பேசினார்.

அந்நாள் முதல் இலங்கைத் தமிழருக்கு உரிமை வேண்டும என்று போராடினார். டொனமூர் கொமிஷனைப்பற்றி சேர். பொன். இராமநாதனுடன் தொடர்பு கொண்டார். டொனமூர் சட்டத்தை எதிர்த்து பகிஷ்கரிப்புப் செய்யவேண்டும் என்று யாழ்ப்பாணத்தில் சிலர் செய்த ஏற்பாட்டை ஜீ. ஜீ. ஏற்கவில்லை!

1934ம் ஆண்டு இடைத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தார். அதன்பேரில் நடைபெற்ற தேர்தலில் பருத்தித்துறையில் போட்டியிட்டு முதன்முதலாக சட்ட சபைக்கு தெரிவுசெய்யப் பட்டார்.

இலங்கைத் தமிழ் காங்கிரஸ உருவாக்கப்பட்டபோது அதில் முக்கியஸ்தர்களாக திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்துடன் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், ரீ. எம். சபாரெட்ணம், டாக்டர் எஸ். சுப்பிரமணியம், ஆர். சிவகுருநாதர், திரு. சிவசுப்பிரமணியம் ஜே. தியாகராஜா ஆகியோரும் விளங்கினர்.

மலையகத் தமிழர் சார்பாக திருவாளர்கள் ஐ எக்ஸ். பெரைரா, மோத்தா, நடேச ஐயர் முதலியோர் அங்கம் வகித்தனர். இலங்கையில் முதன்முதலில் எல்லா மாகாண தமிழ் மக்களும் பிரதேச வேற்றுமையின்றி அங்கத்துவம் வகித்த ஒரே கட்சி இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியே.

'இலங்கைக்குச் சுதந்திரம், இந்தியத்தமிழருக்கு உரிமை' இவற்றை தன்கோரிக்கைகளாகக் கொண்டு அந்நாளில் தமிழ்காங்கிரஸ் உழைத்தது.

1929ல் இங்கிலாந்து பயணமானார். அங்கு மகாத்மா காந்தியின் முக்கிய சீடர்களில் ஒருவரும — சிறந்த சமூகசேவையாளரும். சட்ட வல்லுனரும், பாராளுமன்றத்தில் செல்வாக்குப்பெற்றிருந்த யூதருமான எஸ்.எச். ஐ. பொலாக்குடன் தொடர்புகொண்டு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பினார். இவரது துணிவையும் திறமையையும் கண்ட திரு. பொலாக் அவர்கள் "திரு. பொன்னம்பலம் தனித்தே இலங்கைத் தமிழருக்கும், இந்தியத் தமிழருக்கும், ஏனைய தமிழருக்கும் பெரும் சேவை செய்வதற்கென்று ஆண்டவனல் அனுப்பப்பட்ட தூதர்போன்றவர்'' என்ற பாராட்டைப்பெற்றார். அப்பாராட்டு அடங்கிய கடிதம் தமிழ் காங்கிரஸ் செயலாளரான திரு. மோத்தாவிற்கு

—5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின ஒற்றுமையை சிதறவிடாது இன விடுதலைக்காக உழைப்போம்!

## மறைந்த தலைவருக்கு இதுவே நாம் செய்யும் கைம்மாறு!

### நாவலர் அமிர்தலிங்கம் இரங்கல்!

**“தமிழினத்தின் ஒற்றுமை, தன்மானம், விடுதலை ஆகியவற்றுக்காக உழைத்த தலைவர் பொன்னம்பலத்துக்கு நாம் செய்யக் கூடிய கைம்மாறு அந்த ஒற்றுமை சிதையாது, எம் இனத்தின் விடுதலைக்காக உழைப்பதேயாகும்!”**

இவ்வாறு திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின்மறைவு குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் நாவலர் அ. அமிர்தலிங்கம் விடுத்துள்ள இரங்கற்செய்தியிற் கூறியுள்ளார்.

நாவலரின் செய்தியின் முழுவிபரம் வருமாறு:-

“இந்நாட்டு அரசியல் வானில் கடந்த 40ஆண்டுகளுக்கு மேலாக சுடர்விட்டுப் பிரகாசித்த நட்சத்திரம் மறைந்துவிட்டது. சேர். பொன். இராமநாதனின் மறைவின் பின் ஈழத்தமிழ் அரசியல் வாழ்வில் மாபெரும் தலைவராக மலர்ந்தவர் திரு. பொன்னம்பலம் ஆவார்.

தமிழ் இனத்தின் தனித்துவத்தை வலியுறுத்தி அவர்கள் இந்நாட்டில் அடிமைகளாக வாழாது சமத்துவமாக வாழ்வதற்கு அரசியல் அமைப்பில் பாதுகாப்புத் தேடி அரும்பாடுபட்டு உழைத்தார்.

சோல்பரி ஆணைக்குழு அவரது நம்பிக்கையைச் சிதைத்து தமிழினத்திற்கு பாதகமான அரசியல் அமைப்பை சிபாரிசு செய்த நேரத்தில் அதனை எதிர்த்து நின்றது மட்டுமல்லாது அந்த அரசியல் அமைப்பை ஆதரித்த உறுப்பினர்களையும் அரசியல் வாழ்வில் இருந்து அகற்றினார்.

1948ம் ஆண்டுதொடக்கம் சிங்களத்தலைவர்களுடன் ஒத்துழைத்து எமது உரிமைகளை பெறும் முயற்சியை மேற்கொண்டார். ஆனால், 1956ம் ஆண்டில் தனிச்சிங்கள சட்டம்கொண்டு வரப்பட்ட நேரத்தில் நாட்டில் எமக்கு சமத்துவம் இல்லாவிட்டால் தமிழ்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று பாராளுமன்றத்தில் பிரேரணை கொண்டு வந்தார்.

இந்நாடு குடியரசாக்கப்பட்ட பின் தமிழினத்தின் உரிமைகளை நிலை நாட்டுவதற்காக தமிழர் கூட்டணி அமைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அதற்குஆக்கபூர்வமான ஆதரவைக் கொடுத்தார். அத்துடன் தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர்களில் ஒருவராகத்தேர்ந்தெடுக்கப்பட்ட பின் நோய்வாய்ப்பட்ட நேரத்திலும் தம் பங்கைசெய்ய முன்வந்தார்.

கடந்த ஆண்டு எனக்கும், மூன்று எம். பி.க்களுக்கும் எதிராக தொடரப்பட்ட வழக்கு விசாரணையில் அவருடைய சட்ட ஞானமும், வாக்கு சாதுரியமும் சுடர்விட்டுப் பிரகாசித்தன. அந்த நீதிமன்றத்தில் சட்டவாதத்தின் மத்தியில், இந்நாட்டில் தமிழினம் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரம் பெற்று வாழ்வது எவ்வகையிலும் சட்ட விரோத மாகாது என ஆணித்தரமாக எடுத்துக் கூறினார்.

தமது அறிவாலும், அளவிடற்கரிய ஆற்றலாலும், விடா முயற்சியாலும், மதிநுட்பத்தாலும் ஈழத்தமிழ் மக்கள் இதயத்தில் கால் நூற்றாண்டுக்கு மேலாகதனி அரசு செலுத்திய தலைவரின் மறைவு நெருக்கடிமிகுந்த இக்கால கட்டத்தில் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

தமிழினத்தின் ஒற்றுமை, தன்மானம், விடுதலை ஆகியவற்றுக்காக உழைத்த தலைவருக்கு நாம் செய்யக்கூடிய கைமாறு அந்த ஒற்றுமை சிதையாது எம் இனத்தின் விடுதலைக்காக உழைப்பதேயாகும்.

## ஜீ.ஜீ. யின் அரசியல் வாழ்வில்...

—4-ம் பக்கத் தொடர்

திரு. பொலாக் அவர்களால் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

இவருடைய இங்கிலாந்துப் பயணம் ஈழத்தின் உண்மை நிலையை அவர்களுக்கு உணர வைப்பதாக அமைந்தது.

இங்கிலாந்தின் பிரதிநிதியாக அந்நாளில் பதவி வகித்த சேர். கோல் டிகெட்டின் அனுசரணையுடன் திரு. டி. எஸ். சேனநாயக்கா போன்றவர்கள் தமது அதிகாரங்களை இன்னும் பலப்படுத்தக்கோரி அனுப்பி வைக்கப்பட்ட கோரிக்கையின்மீது அங்கு உண்மை நிலையை எடுத்து விளக்குவதற்காக திரு. பொன்னம்பலம் மீண்டும் இங்கிலாந்து பயணமானர்.

அங்கு போர்ட், ருக்குலர், சேர். பேஜ் ஹென்றிக்ரெுப்ற் ஆகியோருடன் துணையுடன் அதை எதிர்த்து விவாதித்தார். அங்கிருந்து கொண்டே நிலைமையை விளக்கி இலங்கைக்கு தந்தி மூலம் தெரிவித்தார். அதன் பேரில் சேர். அருணசலம் மகாதேவா முதலானோர் பொன்னம்பலத்தின் நிலையை ஆதரித்து கையொப்பமிட்டு இங்கிலாந்திற்கு உடனடித் தந்தியை அனுப்பிவைத்தனர்.

அந்தத் தந்தியின் உதவியுடன் — திரு. பொன்னம்பலம் சேர். கோல்டிக்கெட்டுடன் சேர்ந்து சிங்களத் தலைவர்கள் அனுப்பிவைத்த கோரிக்கைகளை முறியடித்தார். அதன் பொருட்டு “சேர். பொன். இராமநாதனல் சாதிக்கமுடியாமற் போனதை திரு. பொன்னம்பலம் சாதித்தார்” என்று ஏனையோர் போற்றக்கூடிய அளவிற்கு பெயர் பெற்றார்.

அரசியல் காரணங்களுக்காக அந்நாளில் அவர் இங்கிலாந்துக்கு மேற்கொண்ட நான்கு பயணங்களையும் தனது சொந்தச் செலவிலேயே மேற்கொண்டார் என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

1947ம் ஆண்டு முதன் முதலாக இலங்கைப் பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்பட்ட ஜீ. ஜீ. அவர்கள், ஏறத்தாழ 13ஆண்டுகள் யாழ்ப்பாணத்தொகுதி பா. உ. வாக விளங்கினர். 1960 பொதுத்தேர்தலும், 1970ம் பொதுத்தேர்தலும் தமது வெற்றிவாய்ப்பை இழந்தார்.

டி. எஸ். சேனநாயகா மந்திரிசபையிலும், 1952ல் டட்லி சேனநாயகா மந்திரி சபையிலும், கைத்தொழில் மீன்பிடி அமைச்சராகவிளங்கினர்.

1948ல் சட்டத்துறையில் கே. ஸி. பட்டம் பெற்றார். பின்னர் அது கியூ. சி.யாக மாறியது.

1962ம் ஆண்டு புரட்சிச் சதிவழக்கில் ஜீ. ஜீ. நிகழ்த்திய சட்டவாதம் அவரது புகழை மேலும் உயர்த்தியது.

1965ல் ஐ. நா. பொதுச் சபையில் இலங்கைப் பிரதிநிதியாக கலந்துகொண்டு தமது சொல் வன்மையினல் உலக நாடுகளை கவர்ந்தார்.

அண்மையில் தமிழக முன்னள் முதலமைச்சர் கலைஞர் கருணநிதிக்கு எதிராக இந்திய மத்திய அரசினல் சுமத்தப்பட்டிருக்கும் கோதுமை ஊழல் வழக்கில் கருணநிதியின் சார்பாக சென்னை நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்,

கருணநிதி வழக்கில் பொன்னம்பலம் வெற்றியீட்டியிருப்பார்; ஆனல் பொறுமை பிடித்த காலனுக்குத்தான் அது பிடிக்காமற் போய்விட்டது!

## கூட்டணியின் யாழ்தொகுதி அமைப்பாளர் இரங்கல்

“தமிழன் என்று சொல்லடா — தலைநிமிர்ந்து நில்லடா என்று தமது வெண்கலக் குரலால் சங்கநாதம் செய்தபடி, தமிழர் தாழ்வு நீக்கப் புறப்பட்ட தன்னிகரில்லாத் தலைவரான ஜீ. ஜீ. மறைந்துவிட்டார் என்ற செய்திக்கு—டு கலக்கமடையாத தமிழ் உள்ளங்கள் தமிழ் ஈழத்தில் மட்டுமல்ல —தமிழ் உலகிலேயே கிடையாது. தமிழ்த்தலைவர்களை மாட்ட நினைத்த சிறைச்சாலைக்கு குறுக்கே நின்று நீதிமன்றத்தில அவர் ஆற்றிய சட்டவாதத்னத எம்மால் மறக்கப்போமோ? சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஆட்சேபித்து தமிழ்நாட்டில் அவர் வாதம் நிகழ்த்திவந்த பிறிதொரு வழக்கின் முடிவு தெரியு முன்பே எம் தலைவரின் உயிரை காலன் கவர்ந்துவிட்டான். இந்த இரு வழக்குகளிலும் வாதாடி தமிழர்களின் உரிமையை நிலைநாட்ட முயன்ற தலைவர் மறைந்துவிட்டார். அவரது பிரிவினல் உலகத்தமிழர்களுக்கே பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது.”

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் அமைப்பாளர் திரு வெ. யோகேஸ்வரன் விடுத்த இரங்கற் செய்தியிற் தெரிவித்துள்ளார்.

## தேசிய அரசுப் பேரவைக் கூட்டம் மூன்றுமாதகாலத்துக்கு திடீரென ஒத்திவைப்பு!

தேசிய அரசுப்போரவையின் அடுத்த கூட்டம் மூன்றுமாத காலத்துக்கு திடீரென ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. பேரவையின் கூட்டத்தை மூன்றுமாத காலம் ஒத்திப்போடும் முடிவை அரசாங்சம் 10-2-77ல் எடுத்தது. இதன் பிரகாரம் இனி 19-5-77ல் தான் பேரவை கூடும்.

எதிர்வரும் 17-2-77ல் தேசிய பேரவை கூடி அரசின் மீது எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதிக்க இருந்தது தெரிந்ததே.

## “கூட்டணியின் பலம்வாய்ந்த ஒரு மரம் சாய்ந்துவிட்டது!”

### சிவசிதம்பரம் இரங்கல்!

“தமிழ் மக்களின் மூத்த தலைவர்களில் ஒருவரை— தமிழ் மக்களின் சார்பில் குரல் எழுப்பி வந்த உத்தமரை — தமிழ் மக்களுக்கு வரப்போகின்ற இன்னல்களை அறிந்து முன்கூட்டியே அபாய அறிவிப்பு நல்கிய தலைவரை நாம் இழந்துவிட்டோம்.

“அவர் சோல்பரிக் கமிஷன் முன் தமிழினத்தின் உரிமைகளுக்காக வாதாடி சில பாதுகாப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்தார்.

“தமிழ்த் தலைவர்களுக்கு எதிரான வழக்கில் ஆஜராகி சட்டப்பிரச்சினைகளை அலசி சட்டத்துறையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய சட்டமேதை பொன்னம்பலம் மறைந்துவிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பழுத்த பெரிய பலம்வாய்ந்த மரம் ஒன்று சாய்ந்துவிட்டது. தமிழினத்தின் ஒற்றுமைக்காக பாடுபட்ட இந்தத் தலைவரின் பிரிவு ஈடுசெய்ய முடியாதது!

—மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர்களில் ஒருவரும், தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளரும், காலஞ்சென்ற அமரர் பொன்னம்பலத்தின் நெருங்கிய நண்பருமான சட்டத்தரணி மு. சிவசிதம்பரம் விடுத்துள்ள இரங்கற் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## நோர்வூட்டில் மகா சிவராத்திரி விழா!

இம்மாதம் 16-ம் திகதி புதன்கிழமை நோர்வூட் இந்து வாலிபர் சங்கத்தினல் மகாசிவராத்திரி விழா நோர்வூட் ஸ்ரீ சிவசுப்ரமணிய கோவிலில் வெகு விமரிசையுடன் கொண்டாடப்படவிருக்கின்றது. திரு. ஈழவேந்தன், திரு. குருசாமி ஆகியோர் சிறப்பு சொற்பொழிவாளர்களாகக் கலந்து கொள்கிறார்கள். கோப்பாயைச் சேர்ந்த திரு. ப. தியாகராஜாவின் நூதன கதம்ப இசை நிகழ்ச்சியும் நோர்வூட் மறுமலர்ச்சி மன்றத்தினரின், இயல், இசை, நாடக நிகழ்ச்சியும் நடைபெறவிருக்கின்றது.


## ஓர் நற்செய்தி

16ம் திகதி மகா சிவராத்திரியை முன்னிட்டு திருக்கேதீஸ்வரம் கோவில் வீதியிலுள்ள எமது விற்பனை வாகனத்தில் சோப் வாங்கும் அன்பர்களுக்கு சிவராத்திரி விரதம் என்ற புத்தகமும், புதுவருடக் கலண்டர் ஆகியவற்றுடன் அரிச்சுவடி, வாய்ப்பாடு மட்டைகளும் அன்பளிப்பாக வழங்கப்படும்.

மில்க்வைற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதுமய்யா சோதனே!

(3-ம் பக்கத் தொடர்)

த்தியிருந்த ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள், இந்த ஒற்றுமையை மேலும் உறுதிப்படுத்தும் முகமாகவே கூட்டணித் தலைவர்கள் சம்பந்தப்பட்ட ட்ரயல்—அற் — பார் வழக்கில் தந்தை செல்வாவின் தலைமையில்—அமரர் திருச்செல்வத்துடன் சேர்ந்து ஆஜராகி வாதாடிய அந்தக் காட்சியை இனி நாம் என்று காண்போம்?

சிங்கத்தின் கால்கள் பழுதுபட்டாலும் அதன் சீற்றம் குறையாதது போல — நோய் வாய்ப்பட்டு உடல் தளர்ச்சியடைந்திருந்த போதிலும், அதனை கிஞ்சிற்றும் பொருட்படுத்தாது கடமையே பெரிது எனும் உணர்வுடன், ட்ரயல்—அற்—பார் நீதிமன்றத்தில் ஆஜராகி பலநாட்களாக பொன்னம்பலம் அவர்கள் வாதாடிய அந்தக்காட்சி தமிழ் சமுதாயத்தின் கண்களில் இன்னும் பசுமையாக படம்போல ஓடிக்கொண்டிருக்கிறது; ஆனல் பொன்னம்பலம் அவர்களோ படமாகிவிட்டார்!

இந்த வழக்கின்போது — நமது நாவலர் அமிர்தலிங்கம் அவர்களுடன் நெருங்கிப் பழகிடும் வாய்ப்புபெற்ற பொன்னம்பலம் அவர்கள் —அமிர்தலிங்கம் போன்ற துணிவுபடைத்த இலட்சிய வீரர்களே இயக்கத்துக்கு தலைமை தாங்கவேண்டுமென்ற தமது கருத்தை பகிரங்கமாகவே வெளியிட்டார்; இங்கு மட்டுமல்ல—தமது இயலாமையையும் பொருட்படுத்தாது தி. மு. க. தலைவர் கலைஞர் கருணநிதி சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகிவாதாடுவதற்காக தமிழகம் சென்றிருந்தபோதும், அங்கும் இதே கருத்தையே அவர் தெரிவித்ததாகவும் கேள்விப்பட்டேன்!

தமிழர் விடுதலைக் கூட்டணி மூலம் ஏற்பட்டுள்ள தமிழின ஒற்றுமையை மேலும் பலப்படுத்தும் வகையிலும் விடுதலைக் கூட்டணியின் தனிநாடு இலட்சியத்துக்கு பூரண ஆதரவு வழங்குகிற முறையிலும், தம்முடைய இறுதிக்காலத்தில் ட்ரயல்—அற் — பார் வழக்கில் தோன்றி, அமிர் தலிங்கம் அவர்களுக்காக வாதாடி, எதிரிகளை திகைப்பிலாழ்த்தி —ஈழத் தமிழினத்தை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திய பொன்னுவின் பணி எந்நாளும் நம் நெஞ்சை விட்டு நீங்காது!

**சிங்கள வர் எம்மை அடிமைகளாக்க முயன்ருல், நாம் அவர்களை விட்டுப்பிரிந்து எங்கள் சொந்தக் கருமங்களை நாமாகவே நிர்வகிக்க ஏற்பாடுகள் செய்வோம்!**

என்று 22-3-1956ல் திரு. பொன்னம்பலம் வெளியிட்ட அறிக்கையொன்றிலேயே திட்டவட்டமாகக் கூறியிருக்கிருர். அந்த அடிப்படையிலேதான் தமிழர் விடுதலைக் கூட்டணி இன்றைக்கு தனிநாடு — தமிழ்ஈழம் என்ற இலட்சியத்தை முன்வைத்துப் பணியாற்றி வருகிறது!

எனவே வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்தபடி அமரராகிவிட்ட பொன்னம்பலம் ஐயா அவர்களின் பூதவுடலுக்கு நமது இறுதி அஞ்சலியைத் தெரிவிக்கும் அதே வேளையில்—

ஏற்பட்டிருக்கும் இன ஒற்றுமையை—தமிழர் விடுதலைக் கூட்டணியை—என்ன தியாகங்கள் செய்தாவது—இறுதிவரை கட்டிக்காப்போம்!

தமிழ்ஈழம்—தனிநாடு என்ற உயர்ந்த இலட்சியத்துக்காக இன்னுயிர் தரவேண்டி நேரடினும் இறுதிவரை அந்தரங்க சுத்தியுடன் உழைப்போம்!

என்கிற உறுதிமொழியை தமிழர் நாம் ஒவ்வொருவரும் எடுப்போம்!

வாழ்க பொன்னம்பலத்தின் புகழ்!

வளர்க தமிழின ஒற்றுமை!!

**உன் அன்புத் தோழன்.**

கோவை-மகேசன்

# நினைத்தது ஒண்ணு - நடந்தது ஒண்ணு

"நினைத்தது ஒண்ணு, நடந்தது ஒண்ணு, அதனலே முழிக்குதே இந்திராப் பொண்ணு" என்றே பாடிடத் தோன்றுகிறது — இந்திய அரசியலில் திடீர் திடீர் என ஏற்பட்டுவரும் மாற்றங்களைப் பார்க்கும்போது! இந்தியப் பாராளுமன்றத்தைத் திடீரென கலைத்து தேர்தல் நடத்தப் போவதாக திடீரென அறிவித்து இந்திய மக்களையும் உலக மக்களையும் திடீரென அதிர்ச்சிக் கடலில் மூழ்கடித்தார் இந்திராகாந்தி! அப்படிப்பட்ட இந்திராகாந்தியையே அதுவரை மௌனமாக



இருந்துவிட்டு மிகப்பெரிய அதிர்ச்சிக்குள் தள்ளிவிட்டார் ஜெகஜீவன்ராம். யாரும் எதிர்பாராத நேரத்தில் யாரும் எதிர்பாராத ஒரு காரியத்தை செய்து இந்திய மக்களினதும், உலக மக்களினதும் கவனத்தை தம்பால் ஈர்த்துவிட்ட ஜெகஜீவன்ராம் அவர்கள் சரியான சாமர்த்தியசாலியென்றே கூறவேண்டும்.

எதை எப்பொழுது செய்யவேண்டுமோ அதை அப்பொழுது செய்யவேண்டும் என்ற அரசியல் சாணக்கியத்தை அறிந்திருந்த ஜெகஜீவன்ராம், கூம்பும் பருவத்தில் கொக்குப்போல இருந்துவிட்டு, குத்தவேண்டிய நேரத்தில் குத்திவிட்டார். இந்திரா காங்கிரசிலிருந்து ஜெகஜீவன்ராம் வெளியேறியதும், இந்திராவுக்கு எதிராக அவர் சுமத்தியுள்ள பாரதூரமான குற்றச்சாட்டுக்களும இந்திய அரசியலில் புதிய அலையை ஏற்படுத்திவிட்டிருப்பது முற்றும் உண்மையே!

இந்திய சுதந்திரபோராட்டங்களில் சிறைசென்ற வீரரும், கோடிக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களின் செல்வாக்குமிக்க தலைவரும், நிறைந்த அனுபவஸ்தருமான ஜெகஜீவன்ராம் அவர்கள் இந்திரா காங்கிரசிலிருந்து விலகி, ஜெயப்பிரகாஷ் நாராயணன், மொரார்ஜி தேசாய்போன்ற எதிர்க்கட்சித்தலைவர்களுடன் இணைந்திருப்பது, இந்திராவுக்கு ஒரு பேரிடியென்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்திரா காந்தியின் சொந்த மாநிலமான உத்தரப் பிரதேசம், பீகார், கேரளா உட்பட பல மாநிலங்களில் ஜெகஜீவன்ராமின் செல்வாக்கு கொடிகட்டிப் பறக்கிறது.

மேலும் ஓராண்டு காலம் பதவியில் நீடிக்க வசதியாக அரசியல் சட்டத்தை திருமதி காந்தி திருத்தி வைத்திருந்தபோதிலும், திடீர்த் தேர்தல் நடத்துவதற்கு அவர் முன்வந்ததற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம். (1) இவ்வாறு செய்வதன் மூலம், ஒரு ஜனநாயக விரோதியென்றும் சர்வாதிகாரியென்றும் தம் மீது விழும் பழிச்சொல்லிலிருந்து தப்பிக்கொள்ளலாம் என்று திருமதி காந்தி நினைத்திருக்கலாம். (2) அவசரகாலச் சட்டத்தின் கீழ் எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்களும் தொண்டர்களும் செயற்படமுடியாதபடி 19 மாதகாலமாக அடக்கப்பட்டிருந்தனர்; அவர்கள் வெளியே வந்து தமது கட்சிகளுக்குப் புத்துயிர் கொடுப்பதற்கு முன்னர், திடீரென தேர்தலை நடத்திமுடிப்பதன் மூலம் வெற்றிக் கனியை தம்பக்கம் சுலபத்தில் பறித்துவிடலாம் என்று இந்திரா எண்ணியிருக்கலாம்.

இந்திராகாந்தி எப்படி எண்ணியிருந்தாலும்— பொதுத்தேர்தல் என்ற புலியின் வாலைப்பிடித்துக் கொண்டுவிட்டதால் இப்போது இந்திய அரசியலில் அவரது நிலை ஓரளவுக்கு ஆட்டம் கண்டுவருவதை அரசியல் அவதானிகள் ஏற்றுக்கொண்டிருக்கிருர்கள்!

ஜெகஜீவன்ராம் அவர்களுடன், உத்தர பிரதேச முன்னுள் முதல்வர் பஹுகுணு, ஒரிசா மாநில முன்னுள் முதல்வர் திருமதி நந்தினி சத்பதி கே. ஆர். கணேஷ், ஆகியோர் காங்கிரசைவிட்டு வெளியேறியதை இந்திய எதிர்க்கட்சித் தலைவர்கள் குதூகலத்துடன் வரவேற்றுள்ளனர். எதிர்கட்சிகளின் பலம் இதனுல் அதிகரித்துள்ளது.

ஜெகஜீவன்ராம் இந்திரா காங்கிரசிலிருந்து வெளியேற முடிவு எடுத்தசந்தர்ப்பம், இந்திய அரசியலில் சரியானதொரு சந்தர்ப்பம் என்றே கூறவேண்டும். அவசரகாலச் சட்டம் நடைமுறையிலிருந்தபோது விலகியிருந்தால் அவர் சிறைக்குள் தள்ளப்பட்டிருப்பது மட்டுமன்றி அவரது விலகலுக்கு இந்திராகாந்தி வேறுவிதமான காரணங்களைக் கூறியிருக்கக்கூடும். ஜெகஜீவன்ராம் கூறும் காரணங்கள் பத்திரிகைகளில் வெளிவந்திருக்காது. இருட்டடிப்பு செய்யப்பட்டிருக்கும்; பொதுத்தேர்தலுக்கு நாளும் குறிக்கப்பட்டிருக்காது; எனவேதான் பத்திரிகைத் தணிக்கையும், அவசரகாலச் சட்டமும் நீக்கப்பட்ட சமயமாகப் பார்த்து ஜெகஜீவன்ராம் தமது திட்டத்தை செயற்படுத்தியிருக்கிருர்!

"சனவரி 18ம் திகதிக்கு முன்னர் நான் பதவி விலகியிருந்தால், தேர்தலே நடக்க வாய்ப்பு இருந்திருக்காது; தேர்தல் அறிவிப்புக்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்பு எனது பதவி விலகல் கடிதத்தை கொடுத்திருந்தாலும் எனக்கு என்ன நடந்திருக்குமோ தெரியாது" என்று அவரே கூறியிருக்கிருர். அத்துடன் 19 மாதகால அவசரகாலத் திரையின் பின்னல் நடைபெற்ற அழுக்குகளை ஒவ்வொன்ருகப் பகிரங்கமாகவே கழுவி வருகிருர் ஜெகஜீவன்ராம்.

தம்மைவிட்டால் நாட்டை ஆள வேறு தகுதியானவர் யாரும் கிடையாது என்ற எண்ணம் ஆட்சிக் கதிரையிலிருக்கும் ஒவ்வொருவருக்கும் ஏற்படுவது வழக்கம். அதற்கு இந்திரா விதிவிலக்கல்ல. எதிர்க்கட்சி ஆட்சியை பிடித்தால், இந்தியாவுக்கு ஆபத்து என்று திருமதி இந்திரா மிரட்டியிருக்கிருர்.

இந்திராவின் இந்த மிரட்டலுக்கு ஜெகஜீவன்ராம் சரியான பதிலடியை கொடுக்கத் தவறவில்லை. இந்திரா சிறுமியாக இருந்த போதே, இந்திய சுதந்திரத்துக்காக சிறைக்குள் வாடியவன் நான்; என்னுலா இந்திய நாட்டுக்கு ஆபத்து ஏற்படப்போகிறது என்று அவர் ஒரே போடாகப் போட்டிருக்கிருர்.

புதுடெல்லியில் இந்திரா காங்கிரஸ் நடத்திய ஒரு இலட்சம் மக்கள் கலந்துகொண்ட முதலாவது தேர்தல் பிரசாரக்கூட்டம் குழப்பத்தில் முடிந்ததும்—எதிர்க்கட்சித் தலைவர்கள் ஜெயப்பிரகாசர், ஜெகஜீவன்ராம், மொரார்ஜிதேசாய் ஆகியோர் அதே இடத்தில் நடத்திய கூட்டத்தில் இரண்டு இலட்சம் பேர் கலந்துகொண்டதும், இந்திராவுக்கு நிச்சயம் நல்ல சகுனமல்ல!

இந்திரா காங்கிரசில் ஏற்பட்டிருக்கும் பிளவுக்கு வெளிப்படையாக பல காரணங்கள் கூறப்பட்டபோதிலும் அடிப்படைக்காரணம் இளைஞர் காங்கிரசுத் தலைவரும் இந்திராவின் புதல்வருமான சஞ்சாய்காந்திதான்! அவசரகாலச்சட்டம் அமுலிலிருந்த காலத்தில் சஞ்சாய்காந்தியை காங்கிரசுக்குள் திடீரென புகுத்தி தனக்குப்பின் தனது வாரிசு ஆக கொண்டுவருவதற்கு திருமதி காந்தி முயல்கிருர் என்பதே இந்திராகாங்கிரசிலுள்ள பழைய காங்கிரஸ் தலைவர்களின் கொதிப்புக்குக் காரணமாகும்.

சஞ்சாய் காந்தியின் திடீர் அரசியல் பிரவேசமும் இளைஞர் காங்கிரஸ் என்றபோர்வைக்குள் நின்று இந்திரா காங்கிரசின் கடிவாளத்தையே அவர் பிடிக்க முற்பட்டதும், இந்திராவுக்கு அடுத்த நிலையிலிருக்கும் பழம்பெரும் கட்சித் தலைவர்களை தூசாக மதித்து, தமது அதிகாரத்தை காங்கிரசுக்குள் புகுத்த முயற்சித்ததும், சஞ்சாய் காந்தியின் இத்தகைய நடவடிக்கைகளையெல்லாம், இந்திராகாந்தியார் கண்டும் காணுமலுமிருந்ததும், ஜெகஜீவன்ராம் உட்பட காங்கிரஸ்கட்சியின் பழைய தலைவர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்திவிட்டிருந்தது.

தனக்குப்பின்னர், தனது மகனை அரசியலில் தனது வாரிசாக இந்திரா காந்தி திட்டமிட்டு உருவாக்கி வருவதாக காங்கிரஸ் கட்சியிலுள்ள பெருந்தலைவர்கள் கருதத்தொடங்கினர். இந்தத் தகராறே ஜெகஜீவன்ராமின் ராஜினமா என்று கூறுவது தவருகாது.

ஜெகஜீவன்ராமின் விலகலுக்குப் பின்னர், சஞ்சாய் காந்தியின் திட்டப்படி முன்னுள் காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு நியமனம் வழங்க மறுக்கும் திட்டத்தை இந்திரா காங்கிரஸ் நிறுத்தி வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

— கோவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்களின் கடமையும் தலைவர்களின் பொறுப்பும்!

**பல்லாண்டு காலமாக பல தரப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் வாழ்ந்த ஈழத்தமிழ் மக்கள், சென்ற ஆண்டு நடைபெற்ற வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் தனித்தமிழ் ஈழம்தான் தமிழர்களின் மாற்ற முடியாத குறிக்கோள் என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.**

ஞா செபஸ்தியாம்பிள்ளை
திருகோணமலை

தமிழ் ஈழம் என்னும் குறிக்கோளை நோக்கி தமிழர்களை இட்டுச் செல்வது தமிழர் விடுதலைக் கூட்டணியே; அப்படியாயின் தமிழர் விடுதலை கூட்டணியில் தமிழ் மக்கள் பூரண நம்பிக்கை வைக்கவேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணியும் அதன் தலைவர்களும் தமிழ் மக்களின் அசைக்கமுடியாத நம்பிக்கைக்குப் பாத்திரவான்களாய் இருக்கவேண்டும். ஒரு இயக்கத்தைத் தலைமைதாங்கி வழிநடத்திச் செல்பவர்களில் மக்களுக்குள்ள நம்பிக்கையே அவ்வியக்தின் இலட்சியத்தைத் வென்றடைய வைக்கும். எனவே இயக்கத்தின் தலைவர்கள் முன்னணித்தொண்டர்கள் மட்டில் மக்கள் சந்தேகம் கொள்ளாதபடி நடந்துகொள்வது அவர்களின் பாரியகடமையாகும். தலைவர்களில் ஒருவர் இருவர் தமது சொந்தக் கருத்து என்ற தோரணையில் பிரச்சினைக்குரிய விடயங்களை பகிரங்கப்படுத்துவது பொது மக்களிடத்தில் வீண் சந்தேகங்களையும் சர்ச்சைகளையும் கிளப்பிவிடுகிறது. அண்மைக்காலத்தில் ஈழத்தமிழகத்தில் இதனைக் கண்கூடாகக் கண்டுள்ளோம். எனவே இனிமேலாகுதல் இப்படியான சர்ச்சைக்குரிய விடயங்களை பொறுப்புள்ள தலைவர்கள் தமது "சொந்தக் கருத்து" என்றதொனியில் பகிரங்கப்படுத்துவதைக் கைவிடுவது நன்று.

## பொதுசன வாக்கெடுப்பு

தமிழீழத்தை மீளவமைப்பதையே தனது குறிக்கோளாகக்கொண்ட தமிழர் விடுதலைக்கூட்டணி வரப்போகும் பொதுத்தேர்தலை ஒரு பொதுசன வாக்கெடுப்பாக நடத்துவதெனத் தீர்மானித்துள்ளது. எனவே இங்கு சாதி, மத, பிரதேச வேறுபாடுகளனைத்தையும் கடந்த ஒரு வாக்கெடுப்பு நிகழ்ச்சியாகவே கருதப்படும். இத்தனைகாலமும் ஒரு வேட்பாளரின் அந்தஸ்து அவர் சார்ந்துள்ள கட்சி அதன் இலட்சியம்போன்ற பலதரப்பட்ட குணதிசயங்களின் அடிப்படையில்தான் வாக்களிப்பு நடைபெற்றுள்ளது.

மன்னார் இடைத்தேர்தலை எடுத்துக்கொண்டால் அங்கு எப்பேர்ப்பட்ட குறுகிய மனப்பான்மை அவ்வமயம் அம்மக்கள் மத்தியில் நிலவியிருந்திருக்கிறதென்பதை ஊகிக்கமுடியும். சாதி மத பிரதேச வேறுபாடு ஒரு புறம், தனக்கு கட்சி 'ரிக்கட்' தரவில்லையே என்ற எரிச்சல் ஒரு புறம், வேட்பாளர் மட்டில் தனிப்பட்டமுறையில் உள்ளகோபம் இப்படிப் பல்வேறு காரணங்களின் நிமித்தமே மன்னார் இடைத்தேர்தலில் த. வி. கூட்டணி தோல்வியடைந்தது. திரு. அழகக்கோன் அவர்கள் மறைந்ததும் அத்தொகுதிக்கு தமிழர் கூட்டணி சார்பில் போட்டியிட எத்தனையோ பேர் முண்டியடித்தார்கள். அவர்களில் ஒருவருக்கு கட்சி 'ரிக்கட்' கொடுத்ததும் மற்யோர் அவ்வேட்பாளரை எதிர்க்க முற்பட்டனர். அதன் பயன் ஈழத்தமிழினமே வெட்கப்படவேண்டிய நிலையேற்பட்டது. இம்மாதிரியான நிலை வரப்போகும் பொதுத்தேர்தலிலும் ஏற்பட்டால் நிச்சயம் தமிழ் ஈழ அமைப்பும் வெகுதூரம் பின்தள்ளப்பட்டுவிடும். எம்மட்டில் அக்கறைகொண்டுள்ள உலக நாடுகளிடம் நாம் வெட்கித்தலை குனியவேண்டிவரும்.

## ஒரு கேள்வி

எனவே இத்தனை காலமும் நடைபெற்ற பொதுத்தேர்தல்களைவிட முற்றிலும் வேறுபட்ட நிலையில் வரப்போகும் பொதுத்தேர்தலை தமிழ் மக்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. 1619ம் ஆண்டு போர்முனையில் பறிகொடுத்த தமிழ் ஈழத்தை மீளவமைப்பதா இல்லையா என்பதுதான் தமிழர் எடுக்கவிருக்கும் முடிவாகும். இந்நிலையில் வேட்பாளர்களின் குணதிசயங்களை அலசி ஆராய்வது தமிழ் வாக்காளர்களுக்கு அவசியமற்ற காரியமாகும்.

## கூட்டணியின் கடமை

இந்நிலையில் தமிழர் விடுதலை கூட்டணியின் வேட்பாளர் தெரிவுக் குழுவானது மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டியுள்ளது. தனது வேட்பாளர்களின் குணதிசயங்களையும், அன்னார் தமிழ் ஈழவிடுதலைப் போரில் உயிர்விட ஆயத்தமாய் இருக்கிறாரவென்பதையும் நன்கு ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டியது த. வி. கூட்டணியின் தலைமைப் பீடமே எக்காரணம் கொண்டும் தலைமைப்பீடத்தினரின் சொந்த விருப்புவெறுப்புகளுக்கமைய வேட்பாளர்களைத் தெரிவு செய்யாது தமிழ் ஈழத்தை மீள அமைப்பதற்கான தளபதிகளாகத் தேர்ந்தெடுப்பது மிக மிக அவசியமாகும்.

**பொதுத்தேர்தலின் பின் தமிழ்ஈழம் அமைக்கும் காலகட்டம்ஆரம்பமானதும் நிச்சயம் பா. உ.க்கள் பலிக்கடாக்களாக முன்சொல்ல வேண்டிவரும். அதற்குப்போட்டி போட்டுக் கொண்டு முன் செல்லக் கூடியவர்களையே த. வி. கூட்டணி வேட்பாளராக நிறுத்தவேண்டும்.**

எப்படியாகுதல் வென்றுவிடவேண்டுமென்பதற்காக "மாட்டீன்" போன்றவர்களை நியமித்தல் நிச்சயம் எமது போராட்டத்தை பலவீனப்படுத்திவிடும்.

## சகல தொகுதிகளிலும் போட்டியிடுக

அடுத்து, தமிழர் விடுதலை கூட்டணி தமது அபேட்சகர்களை நியமிக்கும் தொகுதிகளைப்பொறுத்த விடயமும் நன்கு ஆலோசனை செய்யப் வேண்டிய தொன்ருகும். ஈழம்வாழ் தமிழ்பேசும் மக்கள் 35 லட்சம் என்று கூறிவருகிறோம். இந்த 35லட்சம் தமிழ் மக்களில் எத்தனை லட்சம் பேர் தமிழ் ஈழத்தை ஆதரிக்கிருர்கள் என்பதே பொதுசன வாக்கெடுப்பின் தார்ப்பரிப்பாகும்.

தமிழ்த் தலைவர்களுக்கெதிரான வழக்கில் உயர்நீதிமன்றத்தில் வாதாடிய இலங்கையின் முதுபெரும் சட்ட மேதை அமரர் திருச்செல்வம் அவர்கள், கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய முன்னணிக்குக் கிடைத்த வாக்குகளை விட கூடுதலான வாக்குகள் ஐக்கிய முன்னணிக்கு எதிராக அளிக்கப்பட்டுள்ளதால் இலங்கைக்குப் புதிய அரசியலமைப்பை வரைய ஐக்கிய முன்னணி அரசுக்கு அதிகாரமில்லையென நிரூபித்தார். இந்த அடிப்படையில் வரப்போகும் பொதுத் தேர்தலில் தமிழ்பேசும் வாக்காளரில் பெரும்பான்மையோர் த. வி. கூட்டணிக்கு வாக்களித்து அதன் மூலம் தமிழ்ஈழ கோரிக்கைக்கு தமிழ்பேசும் மக்கள் கொடுக்கின்ற ஆதரவை அகில உலகும் அறிவதற்கு வாய்ப்பாக தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மையாய் உள்ள சகல தொகுதிகளுக்கும் த. வி. கூட்டணி அபேட்சகர்களை நிறுத்துவது பற்றி நன்கு ஆலோசிப்பது மிகவும் பயனுடையதாகும்.

## முக்கியம் எது?

வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டும் த. வி. கூட்டணி போட்டியிட்டால் வெளி மாகாணங்களில் பெருந்தொகையாக வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்கள் தமது வாக்குகளை தமிழ்ஈழக் கோரிக்கைக்கு ஆதரவாக அளிக்க முடியாத நிலை தோன்றும். இது தமிழ்ஈழகோரிக்கையை ஆதரிப்போரின் எண்ணிக்கையை குறைவாகக் காட்டிவிடும். எனவே பொதுசன வாக்கெடுப்பு நடத்தவிருப்பதால் தமிழ் பேசும் மக்கள் கணிசமாக உள்ள தொகுதிகளிலெல்லாம் த. வி. கூ. வேட்பாளரை நிறுத்தி அதன் மூலம் தமிழ்ஈழ கோரிக்கைக்கு கிடைத்த ஆதரவை எடுத்துக்காட்ட முடியும். **எதிர்வரும் தேர்தலில் த. வி. கூட்டணியில் எத்தனை பேர் வெற்றிபெற்றனர் என்பதல்லமுக்கியம் எத்தனை இலட்சம் தமிழர் தமிழ்ஈழக் கோரிக்கையை ஆதரிக்கிருர்கள் என்பது தான் முக்கியமானதாகும்** 35 இலட்சம் தமிழ் பேசும் மக்களில் பெரும்பான்மையானோர் த.வி. கூட்டணிக்கு வாக்களியாத பட்சத்தில் த. வி. கூட்டணிக்கு தமிழ் ஈழம் அமைக்க அதிகாரம் இல்லை என்று வாதாட முடியும். எனவே இவ்விடயத்தில் த.வி. கூட்டணி மிகவும் அழகாகச் சிந்தித்து செயல்படவேண்டும்.

## கடமையை செய்வோம்

மொத்தத்தில் வரப்போகும் பொதுத்தேர்தலானது தமிழ் மக்களை பொறுத்த மட்டில் மிக முக்கியமான தேர்தலாகும். விடுதலை இயக்கத்திற்கு பொதுத் தேர்தல் முக்கியமல்லவென்ருலும் தமிழ்ஈழக்கோரிக்கை மட்டில் தமிழ் மக்களின் தீர்ப்பை ஆட்சியாளருக்கும் உலகுக்கும் எடுத்துக்கூற இது ஒரு அரிய சந்தர்ப்பமாகும். வாக்காளர்களும், வேட்பாளர்களும், தலைவர்களும், தொண்டர்களும் மிகவும் பொறுப்புணர்ச்சியுடனும் கட்டுப்பாட்டுடனும் தங்கள் கடமையை மேற்கொள்ளவேண்டியது அவசியமாகும்.

**தமிழ் ஈழத்தை மீள்விக்கும் பணியில் ஒரு முக்கியமான கட்டம்தான் வரப்போகும் பொதுத் தேர்தல். தமிழ்ஈழத்திற்காக உயிர்விட்டோர் சிறையில் அடைபட்டோர், சித்திரவதைபட்டோர், வீடு வாசலின்றி காடுமேடாக அலைந்து திரிவோர், தாயகத்தைவிட்டு அந்நிய நாட்டில் தஞ்சமடைந்தோர், இன்னும் தன் பங்கை ஆற்ற சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே என்று ஏங்குவோர் ஆகிய அனைவரும் களிகூர தமிழ் ஈழத்திற்கான பொதுசன வாக்கெடுப்பு வெற்றியடையட்டும்.**

அதற்காக ஈழத்தமிழன் ஒவ்வொருவனும் தன் கடமையை தன் வருங்காலச் சந்ததியின்பேரால் நிறைவேற்றட்டும்.

வாழ்க ஈழத்தமிழகம்!
வாழ்க இனிது வாழ்கவே!

# தமிழ் இளைஞனே உன்பணி என்ன?

காளையாய், களிருய், எதையும் தாங்கும் இதயம் படைத்தவர்களாய் தமிழ் இளைஞர்கள் இருக்க வேண்டும் என்று எண்ணுகிருேம்.

கோழைகளாய், மோழைகளாய், அஞ்சிச்சாகும் அற்பர்களாய் இருக்கக்கூடாது என்று எச்சரிக்கிருேம்!

படியுங்கள்—போற்றுகிருேம்! வேலை தேடுங்கள், பொருள் சேர்த்திடுங்கள்—பாராட்டுகிருேம்! நாம் உண்டு; நம் குடும்பம் உண்டு; குடி உண்டு குதூகலம் உண்டு; விடுதலையா? அந்தப்பேச்சு வேண்டாம்; என்க்காதடைப்போரை காறி உமிழாது என்ன செய்யலாம் என்று சொல்லுங்கள்!

அன்று படித்தது பதினுரும் வாய்ப்பாடு—இலண்டனில் முப்பதாம் வாய்ப்பாட்டை மட்டும் முணுமுணுக்க சில தமிழர்கள் இருப்பதைக்காண கண்ணீர்விடவே தோன்றுகிறது.

இலண்டன் வந்தார்கள்—படித்தார்கள்—குடித்தார்கள்—சீதனம் பெற்ருர்கள் — சிங்கார வாழ்வு அமைத்து கொண்டார்கள் — எனப் பத்தாண்டைக் கடந்து இலண்டனில் வாழும் நம் மூத்தோர் சிலரை முன்னேடிகளாக எண்ணிடவேண்டாம்!

படித்தார்கள்—உலக வரலாற்றை; வளர்த்தார்கள்—அறிவை; உழைத்தார்கள் — உயர்ந்தார்கள்—தம் ஆற்றலை ஈழவிடுதலைக்கு ஈந்தார்கள் எனப் பெயர் எடுக்கவேண்டும் என்பதே நமது வேண்டுகோள்!

**யாரையும் எடுத்தெறிந்து பேசுவது—மனம்போன போக்கில் விமர்சிப்பது—அவன் என்ன செய்தான் — இவன் என்ன செய்தான்—எனத் தாம் ஒன்றும் செய்யாமல் செய்பவனை இகழ்வது—**

**எழுதினுல் ஈழம் கிடைத்துவிடுமா? பேசினுல் ஈழம் அமைந்துவிடுமா? நாடகம் நடத்தினுல் ஈழம் நடந்துவந்துவிடுமா? இலங்கை சிறையில் தமிழ் இளைஞர்கள் இருந்தால் என்ன? தேசியப் பேரவையா நாடு தரும்? இப்படி எல்லாவற்றையும் தாக்கிவிட்டு—பின் என்ன செய்தால் ஈழம் வரும் என்று சொல்லாமல் நழுவினுல்—ஏதோ விசர் என்றுதானே எண்ணத்தோன்றும்!**

விடுதலைப் பணியில் அவரவர்கள் முடிந்ததைச் செய்வோம்; செய்யமுடியவில்லையானுல் முப்பதாம் வாய்ப்பாட்டை முனகிக்கொண்டு மூலையில் கிடப்போம்! குளிரில் கிடைத்ததைக் கட்டிப்பிடித்துக் கண் அயர்வோம்!

—ஈழ விடுதலை (இலண்டன் தை 1977)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தலைமைப் பண்பு,,

—1-ம் பக்கத் தொடர்

என்று சோல்பரி பிரபுவும், அவரது குழுவினரும் கருதினர்கள்; பொன்னம்பலமோ எதிர்மாருகக் கருதினர். தமிழ் மக்களுக்கு போதியளவு பாதுகாப்பு வழங்கி, பொன்னம்பலம் தெரிவித்த அச்சத்தை சோல்பரி ஆணைக் குழுவினர் போக்கியிருக்க வேண்டும். ஆனுல் பின்னர் தன்னுடைய ஆணைக்குழு செய்த தவறுக்காக சோல்பரி பிரபு வருத்தம் தெரிவித்தார். ஆனுல் இப்படி அவர் கூறியபோது காலம் கடந்துவிட்டது!

திரு. பொன்னம்பலம் மிகச் சிறந்த குற்றவியல் வழக்குரைஞராக விளங்கினர். நாடு முழுவதும் அவருக்கு இத்துறையில் செல்வாக்கு மிகுந்திருந்தது. அவர் பெரிய வருமானமுள்ளவராகத் திகழ்ந்தார்.

அவரை இழந்துவருந்தும், அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

## அமரர் ஜீ. ஜீ. பூதவுடல்....

—1-ம் பக்கத் தொடர்

அமரர்பொன்னம்பலத்தின் பூதவுடல் விசேட விமான மூலம் 10-2-77 வியாழன் நள்ளிரவு மலேசியாவிலிருந்து கொழும்புக்கு எடுத்துவரப்பட்டது.

கொழும்பில் கொள்ளுப்பிட்டியிலுள்ள திரு. பொன்னம்பலத்தின் இல்லத்தில் வெள்ளிக்கிழமை (11-2-77) முழுவதும் பொதுமக்களின் அஞ்சலிக்காக அவரது பூதவுடல்வைக்கப்பட்டிருக்கும்.

சனிக்கிழமை (12-2-76) அதிகாலை விசேட விமான மூலம் இரத்மலானையிலிருந்து பலாலிக்கு எடுத்துச் செல்லப்படும். பலாலியிலிருந்து மோட்டார் கார் ஊர்வலமாக பூதவுடல், தமிழர், விடுதலைக்கூட்டணி தலைமை அலுவலகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு கூட்டணித் தலைவர்கள் அஞ்சலி செலுத்திய பின்னர், யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும்.

பிற்பகல் அங்கு வைத்து இறுதிக் கிரியைகள் இந்து சமய ஆசாரப்படி நடைபெற்ற பின்னர், அங்கிருந்து யாழ் முற்றவெளிக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

சனிக்கிழமை முழுவதும் பூரண கடையடைப்பும் துக்கதின அனுட்டானமும் தமிழ் ஈழம் அடங்கிலும் இடம்பெறுகிறது.

### சிந்தனைசிற்பி இரங்கல்

"தமிழ்ஈழத்தின் விடுதலைக்காக உலக நாடுகளின் மத்தியிலே தமிழ் ஈழத்தின் சார்பில் திரு. ஜீ. ஜீ. அவர்கள் இயங்கவேண்டிய ஒரு நேரத்தில், அவரது சடுதியான மரணம், தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்!"

—இவ்வாறு கோப்பாய் பா. உ. சிந்தனைச்சிற்பி, திரு. சி. கதிரவேற்பிள்ளை விடுத்துள்ள இரங்கல் அறிக்கையில் கூறியுள்ளார்.


பாவியுங்கள் பளிச்சிடும் வெண்மைக்கு




றோயல் நீலம்

நீலம் என்று கேளாது றோயல் நீலம் என்று கேட்டு வாங்கிப் பாவியுங்கள்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

தயாரிப்பாளர்:

சிவா இன்டஸ்றீஸ்

112-1/3, 4-ம் குறுக்குத்தெரு, கொழும்பு-11.

விநியோகஸ்தர்கள்:

சேகர் அன் பிறதர்ஸ்

கொழும்பு.

தொலைபேசி: 35049

செல்லமகால் 5-வது வாரம்

கமலஹாசன், ஸ்ரீவித்யா, ஜெயசுதா, சுந்தரராஜன் நாகேஷ் நடித்த-



கே. பாலச்சந்தரின்

அபூர்வ ராகங்கள்

கெயிட்டி

மகாசிவராத்திரியை முன்னிட்டு காண்பிக்கப்படுகிறது

தேவரின்

கோமா என் குலமாதா

(புத்தம் புதிய கொப்பி)

கிங்ஸ் பதுளை

பத்து மாத பந்தம்

கிங்ஸ்லி-லிடோ 4வது வாரம் யாழ் நகர்

முத்துராமன், ஏ. வி. எம். ராஜன், லலிதா, நிர்மலா, சோ, மனோரமா நடித்த,

வீட்டுக்கு வந்த மருமகள்

10-வது வாரம்

கெப்பிட்டல்

விஜயா (மட்டுநகர்)

எம். ஜி. ஆர். லதா, மஞ்சுளா, [இரு வேடங்களில்] சந்திரகலா நடித்த-

உலகம் சுற்றும் வாலிபன்

(ஈஸ்ட்மன் கலர்)

பிளாசா 5-வது வாரம்

கமலஹாசன், ஸ்ரீவித்யா, ஜெயசுதா, சுந்தரராஜன் நாகேஷ் நடித்த-

கே. பாலச்சந்தரின்

அபூர்வ ராகங்கள்

வெலிங்டன் (யாழ்நகர்)

எம்.ஜி.ஆர், சரோஜாதேவி நடித்த-

பணக்கார குடும்பம் புதிய கொப்பி


இப்பத்திரிகை சினோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் [illegible] பண்டாரநாயகா வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1977-ம் வருடம் பெப்ரவரி மாதம் 13-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப்பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org